2018 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

1. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் 1,367 விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு அவர்தம் உடைமைகளைப் பாதுகாப்பாக வைக்கும்பொருட்டு ஏற்கெனவே அறையில் அமைக்கப் பெற்றிருக்கும் R.C. அலமாரிகளுக்கு, மாணாக்கர் எண்ணிக்கைக்கேற்ப, தனித்தனி இரும்புக் கதவு மற்றும் பூட்டு சாவி ஏற்பாடுகளுடன்கூடிய வசதிகளை ஏற்படுத்தித் தர விடுதி ஒன்றிற்கு 2 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 27 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) இரும்பு அலமாரிகள் நடப்பாண்டில் அமைக்கப்படும்.

2. திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், தருமபுரி மற்றும் வேலூர் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள பழங்குடி இன மக்களுக்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 வீடுகள்வீதம் மொத்தம் 250 வீடுகள் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட, திறனுக்கு ஏற்ப தொழில் துவங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 நபர்களைக் கொண்ட 5 குழுக்களை அமைத்து, ஒரு குழுவிற்கு 10 இலட்சம் ரூபாய்வீதம், 25 குழுக்களுக்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) சென்னை, மறைமலை நகரில் மூன்றடுக்கு கிடங்கு வளாகம், நெல் சேமிப்புக் கலன்கள் அமைத்தல், நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கு கட்டடங்களில் துருப்பிடிக்காத இரும்புக் கூரை வசதி, கூட்டுறவு நிறுவனங்களுக்கு சொந்தக் கட்டடங்கள், மத்தியக் கூட்டுறவு வங்கியின் புதிய கிளைகள் தொடங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைமூலம் சிறப்பான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துகிறது. அதன் அடிப்படையில், கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சென்னை தெற்கு மண்டலத்திலுள்ள போக்குவரத்து நெரிசலை கருத்தில்கொண்டும்,

தேவையின் அடிப்படையிலும், புறநகர்ப் பகுதியான மறைமலை நகரில், நவீன தொழில்நுட்பம் மற்றும் இயந்திரப் பயன்பாட்டுடன்கூடிய மூன்றடுக்கு கிடங்கு வளாகம் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பொள்ளாச்சி, திருவாரூர், தாழையூத்து ஆகிய இடங்களில் உள்ள நவீன அரிசி ஆலை வளாகங்களில் தலா 15,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் நவீன தொழில்நுட்ப நெல் சேமிப்புக் கலன்கள், 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளில் நவீன இயந்திரங்களை நிறுவி தானியங்கி கிடங்குகளாக 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 300 சொந்த கிடங்கு கட்டடங்களில் உள்ள கல்நார் கூரை தகடுகளை அகற்றி, நவீன கூரை அமைப்பான, வர்ணம் தீட்டப்பட்ட, ஸ்திரத் தன்மை கொண்ட துருப்பிடிக்காத இரும்பு கூரை வசதி, நடப்பாண்டில் 100 கிடங்குகளில் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பெருவளாக சேமிப்புக் கிடங்குகளில் முன்னுரிமை அடிப்படையில், இன்றியமையாதத் தேவைகளான சாலை வசதி, நீர்வடிகால் மற்றும் தொழிலாளர் நலன் சார்ந்த சுமை தூக்குவோர் அறைகள், குடிநீர் வசதி மற்றும் மின் ஆக்கி நிறுவுதல் போன்ற பணிகள், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கூட்டுறவு இயக்கங்களை வலுப்படுத்துவதிலும், முன்னேற்றம் அடையச் செய்வதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

6. நடப்பாண்டில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவியுடன் 117 இடங்களில்

2018 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

26 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

7. கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வங்கிகளை நவீனமயமாக்கும் முயற்சியில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவியுடன் 94 இடங்களில் 9 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே வங்கிச் சேவையினை வழங்கும் பொருட்டு, மத்தியக் கூட்டுறவு வங்கியின் 14 புதிய கிளைகள் 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் தலா 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட உரக் கிடங்குகள், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவியுடன் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மற்றும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலை சுருக்கி, வெண்ணெய்யை உருக்கி, மோரைப் பெருக்க வேண்டுமென்று பால் பொருட்களைப் பெறுவதில் உள்ள வழிமுறையைச் சொல்வார்கள். அதைப்போல, ஒவ்வொன்றுக்கும் ஒரு வழிமுறை இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விஷன் 2023–ஐ அறிமுகப்படுத்துகிறபோது, கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும் என்று ஓர் உயரிய கட்டளையை இட்டார்கள். முதலில் கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணினார்கள். அதன் அடிப்படையில்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி*